செ.வெ. எண்:50 நாள்:31.03.2021

**<u>கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள 10 சட்டமன்ற தொகுதிகளில் மின்னணு வகர்குப்பதிவு இயந்திரங்களில் வாக்குச்சீட்டு பொருத்தும் பணி நடைபெற்றது.</u>**

***************

சட்டமன்ற பொதுத்தேர்தல் 2021-யை முன்னிட்டு கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் சட்டமன்ற தொகுதி, நஞ்சை லிங்கம்மாள் தொழில்நுட்ப கல்லூரியிலும், சூலூர் சட்டமன்ற தொகுதி சமூக நல பாதுகாப்பு மைய கட்டிடத்திலும் இன்று(31.03.2021) மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் (Ballot Unit) வாக்குச்சீட்டு பொருத்தும் பணி நடைபெற்றுவருவதை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எஸ்.நாகராஜன் இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

சட்டமன்ற பொதுத்தேர்தல் 2021 முன்னிட்டு கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள 10 சட்டமன்ற தொகுதிகளிலும், ஒரு வாக்குச்சாவடியில் 1050 வாக்காளர்களுக்கு மிகாமல் இருக்கும் வகையில் 4427 வாக்குசாவடிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இத்தேர்தலில் போட்டியிட 12.03.2021 முதல் 19.03.2021 வரை வேட்பாளர்களிடமிருந்து அந்தந்த சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் / உதவித் தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மூலம் வேட்புமனுக்கள் பெறப்பட்டது.

அதன்படி, கோயம்புத்தூர் மாவட்டத்தில் 10 சட்டமன்ற தொகுதிகளில் 72 அரசியல் கட்சி வேட்பாளர்கள், 65 சுயேட்சை வேட்பாளர்கள் என மொத்தம் 137 வேட்பாளர்கள் உள்ளனர்.

| வ. எண் | சட்டமன்ற தொகுதி | கட்சி சார்பு வேட்பாளர்கள் | சுயேட்சை | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | 111-மேட்டுப்பாளையம் | 5 | 5 | 10 |
| 2. | 116-சூலூர் | 7 | 8 | 15 |
| 3. | 117-கவுண்டம்பாளையம் | 7 | 5 | 12 |
| 4. | 118-கோவை வடக்கு | 9 | 11 | 20 |
| 5. | 119-தொண்டாமுத்தூர் | 6 | 4 | 10 |
| 6. | 120-கோவை தெற்கு | 11 | 10 | 21 |
| 7. | 121-சிங்காநல்லூர் | 8 | 13 | 21 |
| 8. | 122-கிணத்துக்கடவு | 8 | 6 | 14 |
| 9. | 123-பொள்ளாச்சி, | 6 | 2 | 8 |
| 10. | 124-வால்பாறை | 5 | 1 | 6 |
| | மொத்தம் | 72 | 65 | 137 |

இந்நிலையில், கோயம்புத்தூர் மாவட்டத்தில் அந்தந்த சட்டமன்ற தொகுதிகளில் உள்ள வாக்குச்சாவடிகளுக்கான வாக்குப்பதிவு இயந்திரங்கள் கடந்த (06.03.2021) அன்று அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிப்பிரமுகர்கள் முன்னிலையில் கணினி மூலம் முதற்கட்ட தற்செயல் தெறிவு (Randomization) மூலம் அந்தந்த சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் வசம் ஒப்படைக்கப்பட்டது.

| சட்டமன்ற பொதுத்தேர்தல் - 2021 மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் விவரம் | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வ.எண் | சட்டமன்ற தொகுதி | மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் தற்செயல் தெரிவு (Randomiztion) செய்யப்படும் இடம் | வாக்குச் சாவடிகள் | மின்னணு வாக்குப்பதிவு இயந்திரகள் | | வாக்குப்பதிவு சரிபார்ப்பு இயந்திரங்கள் (VVPAT) |
| | | | | Ballot Unit | Control Unit | |
| 1. | 111-மேட்டுப்பாளையம் | நஞ்சை லிங்கம்மாள் தொழில்நுட்ப கல்லூரி | 413 | 496 | 496 | 550 |
| 2. | 116-சூலூர் | சமூக நல பாதுகாப்பு மைய கட்டிடம் | 463 | 556 | 556 | 616 |
| 3. | 117-கவுண்டம்பாளையம் | அரசு மகளில் பல்வகை தொழில்நுட்ப கல்லூரி | 676 | 812 | 812 | 900 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 4. | 118-கோவை வடக்கு | சித்தாபுதூர் மாநகராட்சி உயர் நிலைப்பள்ளி | 499 | 1198 | 599 | 664 |
| 5. | 119-தொண்டாமுத்தூர் | பேரூர் வட்டாட்சியர் அலுவலகம் | 471 | 566 | 566 | 627 |
| 6. | 120-கோவை தெற்கு | மாநகராட்சி பெண்கள் உயர்நிலைப்பள்ளி, ராம்நகர் | 359 | 862 | 431 | 478 |
| 7. | 121-சிங்காநல்லூர் | பெர்க்ஸ் மெட்ரிக்குலேசன் பளளீ உப்பிலிபாளையம் | 449 | 1078 | 539 | 598 |
| 8. | 122-கிணத்துக்கடவு | மலையன் மெட்ரிக் உயர்நிலை பள்ளி மதுக்கரை | 485 | 582 | 582 | 646 |
| 9. | 123-பொள்ளாச்சி, | நல்லமுத்து கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி 'M.C.A' பிளாக் | 318 | 382 | 382 | 423 |
| 10. | 124-வால்பாறை | நல்லமுத்து கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி 'A' பிளாக் | 294 | 353 | 353 | 392 |
| | | | **4427** | **6885** | **5316** | **5894** |

**கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள 4427 வாக்குச்சாவடிகளுக்கு 6,885** Ballot Unit **, 5316** Control Unit **, 5894 வாக்குப்பதிவு சரிபார்ப்பு இயந்திரங்களும் (VVPAT) அந்தந்த சட்டமன்ற தொகுதிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

மேலும், இரண்டாம் கட்ட தற்செயல் தெறிவு (Randomization) 29.03.2021 அன்று 10 சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர்களால் தேர்தல் பார்வையாளர்கள், வேட்பாளர்கள் மற்றும் வேட்பாளர்களின் முகவர்கள் முன்னிலையில் நடத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து நேற்று (30.03.2021) வாக்குப்பதிவு சரிபார்ப்பு இயந்திரத்தில் சின்னம் பொருத்தும் பணியும், இன்று (31.03.2021) மின்னனு

வாக்குப்பதிவு இயந்திரத்தில் (Ballot Unit) வாக்குச்சீட்டு பொருத்தும் பணி நடைபெற்று வருகிறது.

கோயம்புத்தூர் மாவட்ட சட்டமன்ற தொகுதிகளில், 16க்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் போட்டியிடும் தொகுதிகளான,

1. 118-கோவை வடக்கு,
2. 120-கோவை தெற்கு,
3. 121-சிங்காநல்லூர்

ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் கூடுதலாக மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள்(Ballot Unit) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

இவ்வாய்வின்போது கட்டுப்பாட்டு அறை கண்காணிப்பு அலுவலர் திரு.சாதனைக்குரல் , மேட்டுப்பாளையம் சட்டமன்ற தேர்தல் நடத்தும் அலுவலர் திரு.குமரேசன், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் /மேட்டுப்பாளையம் வட்டாட்சியர் திருமதி.வசந்தாமணி ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கோயம்புத்தூர்.**